## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்தியவானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (21.06.2023 முதல் 25.06.2023)

**அறிக்கைஎண் 049/2023** **தேதி.20.06.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 31°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்தவாரவானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 16.06.23 முதல் 19.06.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 86 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 64 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14-22 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவார வானிலை (16.06.2023 முதல் 19.06.2023) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 25.06.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16/06 | 17/06 | 18/06 | 19/06 | தேதி | நாள்-1 21/06 | நாள்-2 22/06 | நாள்-3 23/06 | நாள்-4 24/06 | நாள்-5 25/06 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.1 | மழை (மி.மீ) | 16 | 8 | 10 | 10 | 3 |
| 36 | 35 | 34 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 33 | 33 | 32 | 33 |
| 24 | 23 | 23 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 24 | 23 | 23 | 22 |
| 4 | 6 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டர்) | 8 | 8 | 8 | 8 | 8 |
| 73 | 76 | 82 | 86 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 70 | 80 | 70 | 70 |
| 52 | 64 | 64 | 59 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 60 | 50 | 40 | 50 | 40 |
| 22 | 19 | 14 | 18 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 8 | 6 | 6 | 8 |
| 200 | 200 | 180 | 200 | காற்றுவீசும் திசை | 310 | 270 | 270 | 290 | 290 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (21.06.2023 முதல் 25.06.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6-8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து

ஈரோடு  மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு

| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21-06-2023 | 13.0 | 13.0 | 13.0 | 15.0 | 11.0 | 13.0 | 13.0 | 10.0 | 13.0 | 11.0 | 12.0 | 15.0 | 28.0 | 14.( |
| 22-06-2023 | 5.0 | 5.0 | 5.0 | 8.0 | 6.0 | 5.0 | 6.0 | 4.0 | 5.0 | 7.0 | 6.0 | 7.0 | 8.0 | 7.0 |
| 23-06-2023 | 12.0 | 14.0 | 9.0 | 28.0 | 8.0 | 8.0 | 14.0 | 8.0 | 8.0 | 13.0 | 8.0 | 25.0 | 84.0 | 22.( |
| 24-06-2023 | 7.0 | 7.0 | 7.0 | 8.0 | 5.0 | 7.0 | 6.0 | 6.0 | 7.0 | 4.0 | 6.0 | 7.0 | 13.0 | 7.0 |
| 25-06-2023 | 2.0 | 2.0 | 1.0 | 4.0 | 1.0 | 1.0 | 2.0 | 1.0 | 1.0 | 2.0 | 1.0 | 4.0 | 15.0 | 4.0 |

***வேளாண் அறிவுரைகள்***

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு லேசானது முதல் மிதமான தூறல் மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 6 -14 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது. முக்கியமாக திருப்பூர் மாவட்டத்தில் காற்றின் வேகம் அதிகபட்சமாக மணிக்கு 8 -14 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது. மழை எதிர்பார்க்கப்படுவதால் நீர்பாசனம் செய்வதை ஒத்தி வைக்கவும். மேலும் அனைத்து பயிர்களிலும் போதிய வடிகால் வசதியினை உறுதி செய்யவும். அதிகபடியான மழை நீரினை பண்ணைக்குட்டைகளில் வடித்து பின் தேவைப்படும்போது பயன்படுத்தலாம். |
| நெல் | **நடவு** | மழை எதிர்பார்க்கப்படுவதால் போதுமான வடிகால் வசதியுடன் குறுகியகால நெல் இரகங்களை நடவு செய்யவும். மேலும், சாயங்கால வேளைகளில் 2 செமீ அளவிற்கு நீரினைத்தேக்கி பின் காலையில் வடிப்பதனால் வேகமான மழைத்துளிகளினால் நடவு சேய்த நாற்றுகள் புரட்டிபோடுவது தவிர்க்கப்படும். |
| மக்காசோளம் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி ஒரு கிலோ மக்காசோள விதைக்கு 10கிராம் இமிடாகுளோபிரிட் கலந்து விதைக்கலாம். |
| சிறு குறு தானிய பயிர்கள் | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மேற்கு தொடர்ச்சி மலையோரப்பகுதிகளில் சிறு குறு தானிய பயிர்களை விதைக்கலாம். மேற்கு தொடர்ச்சி மலையோரப்பகுதிகளில் கனமழை எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளுக்கு போதிய பாதுகாப்பு செய்யவேண்டும். |
| நிலக்கடலை | வளர் பருவம் | 40 நாட்கள் வயதுடைய நிலக்கடலையில் எக்டருக்கு 400 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்கவும். |
| கரும்பு | | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும்.<br>பின்பட்டகரும்பு நடவு செய்யும் விவசாயிகள் நடவைதொடரவும். மேலும் ஏற்கனவே நடவுசெய்யப்பட்ட இடங்களில் சீரானபயிர் எண்ணிக்கை இருக்குமாறு பார்த்துக்கொள்ளவும். |

| | | |
|---|---|---|
| தக்காளி | நடவு பருவம் | தக்காளி நடவு செய்ய இது உகந்த பருவம் ஆதலால் தக்க ஆயத்த பணிகளை மேற்கொள்ளவும். |
| பூசணிவகை கொடிப் பயிர்கள் | விதைப்பு | கடந்த வாரம் பெய்த மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினைக் கொண்டு பாகல் மற்றும் பூசணிவகை கொடிப் பயிர்களுக்கு 1'×1'×1' குழி எடுத்து ஆற விடவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மழையுடன் மணிக்கு 6 - 14 கி.மீ வரை வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும். தண்ணீர் தேங்காமல் இருக்க போதிய வடிகால் வசதியை ஏற்படுத்த வேண்டும். |
| மஞ்சள் | வளர் பருவம் | கடந்த வாரம் பெய்த மற்றும் எதிர்பார்க்கப்படும் தூறல் மழையினை பயன்படுத்தி முப்பது நாட்கள் வயதுடைய மஞ்சளில் களை எடுக்கவும். |
| கால்நடைகள் | | கடந்த வார மழையின் காரணமாக புதியதாக முளைத்த புல்லினை மேயவிடாமல் கால்நடைகளை பாதுகாக்கவும். மழை எதிர்பார்க்கப்படுவதால் கொட்டகைகளைச் சுற்றி தண்ணீர் தேங்குவதைத் தவிர்க்கவும். |

## குறுஞ்செய்தி

- கால்நடை குடில்களுக்கு உட்புறமும் அதை சுற்றி தண்ணீர் தேங்காமல் பாதுகாப்பதன் மூலம் கொசு உற்பத்தியை குறைக்கலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**